
# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 1



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **பனி – வெண்புறா சிறகுகள் மேல்,** நவம்பர் 28, 1965, ஷ்ரீவ்போர்ட், லூயிசியானா, அமெரிக்கா

---

186. என் தாயார் மகிமைக்குள் பிரவே சித்து விட்டார்கள். அவர்கள் மிகவும் வினோத மானவர்கள். அவர்கள் வாழ்ந்த நாட்களில் மூன்று அல்லது நான்கு சொப்பனங்களைக் கண்டார்கள். அவை யாவும் எப்பொழுதும் உண்மையாகவே இருந்தன. அவர்கள் சொப்ப னத்தை என்னிடம் சொல்லத் தொடங்கினார் கள். நான் "அம்மா... நிறுத்திக் கொள்ளுங்கள். மீதியான சொப்பனத்தை நான் கூறுகிறேன்" என்று சொல்லி அதைக் கூறுவேன். பாருங்கள்?

187. அர்த்தம் உரைப்பதற்காக என்னிடம் நீங்கள் சொப்பனத்தைக் கூறும் போது. நீங்கள் கண்ட விதமாகவே அதை என்னிடம் கூறுவதில்லை, **அதை நான் தரிசனத்தில் காணும்போது, நீங்கள் சொப்பனத்தில் கண்டதை நான் அப்படியே காண்கிறேன்,**

பிறகு அதன் அர்த்தம் என்னவென்று அவர் என்னிடம் உரைக்கிறார். பாருங்கள்? **உங்கள் சொப்பனத்தை நீங்கள் என்னிடம் கூற வேண்டிய அவசியமில்லை, அவர் சொப்பனத்தையே எனக்குக் காண்பித்து விடுகிறார்.** பாருங்கள்? **பிறகு நான், "நீங்கள் இதை கூற மறந்து விட்டீர்களே; அதை கூற மறந்து விட்டீர்களே" என்கிறேன்.** பாருங்கள்? **சொப்பனத்தின் அர்த்தத்தை உரைக்கவல்ல தேவன், அந்த சொப்பனத்தையும் காண்பித்து தரமுடியும்.** அவர் ஒன்றைக் காண்பிப்பாரானால், அதன் அர்த்தத்தை அவரால் உரைக்க முடியும்.

188. அவ்வாறு வேதாகமத்தில் ஒரு சம்பவம் உள்ளதல்லவா? "உன்னால்..." நான்-நான்... அது என் நினைவுக்கு வந்தது. அது, தானியேல், அல்லவா? இல்லை. யோசேப்பு, அது வேதத்தில் எங்கோ உள்ளது. எனக்கு ஞாபகம் வந்தது. "சொப்பனம் என்னவென்று உன்னால் கூறமுடியுமானால்...." ஓ. அது நெபுகாத்நேச்சார் ராஜா. அது சரி. அவன்,

“உங்களால் முடிந்தால்... உங்களால் முடியா விட்டால்...” என்றான்.

189. மந்திரவாதிகள், “சொப்பனத்தை சொல்லும்” என்றனர்.

190. அவன், “சொப்பனம் எனக்கு மறந்து விட்டது” என்றான். அது சரி. எனக்கு அது ஞாபகம் வந்தது.

★★★★★